252

மாகாணக் கணக்காய்வுத் திணைக்களம் – கிழக்கு மாகாணம்
පළාත් විගණන දෙපාර්තමේන්තුව - නැගෙනහිර පළාත
**DEPARTMENT OF PROVINCIAL AUDIT - EASTERN PROVINCE**

**My No:** EP/DPA/07/SPAQ/ 941-36-LA/2023

**Date:** 2023.03. 10

Hon. Chairman/ Secretary,
Pradeshiya Sabha,
Sammanthurai.

சம்மாந்துறை பிரதேச சபை
17 APR 2023
SAMMANTHURAI PRADESHIYA SABHA

Audit Observation – 2022, 2023
Pradeshiya Sabha - Sammanthurai.

தங்களது அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடவடிக்கைகளின் போது கீழ்வரும் அவதானிப்புக்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதற்கான தங்களது பதிலை 14 நாட்களுக்குள் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாகாண கணக்காய்வுத் திணைக்களம், உப அலுவலகம் - கல்முனைக்கு (**Chief Internal Auditor, Department of Provincial Audit, Sub Office – Kalmunai**) அனுப்பி வைக்கவும்.

**அவதானிப்பு – 01**

**ஒப்பந்த வேலைகள் தொடர்பானவை.**

01. **Name of Work :-** Construction of Amusement park at Old Market Complex at Sammanthurai.
**Name of Contractor :-**MOTEC Engineering & Consruction.
**Contract No :-**LDSP/EP/AMP/STR/PS/2021/02
**Contract Amount :-** 8,631,000.00
**Completion Date :-** 06.06.2022

மேற்படி ஒப்பந்த வேலையானது நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியால் மூலப்பொருட்களின் விலை ஏற்றம், Covid -19 காரணங்களால் பூர்த்தி செய்யவேண்டிய காலம் முடிவடைந்தும் பூர்த்தி செய்யப்படாமையை அவதானிக்க முடிகின்றது. எனவே இவ்வொப்பந்த வேலையை நிறைவு செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை ஒன்றினை சமர்பிக்க.



**Head Office:**
KANNIYA ROAD, VAROTHAYA NAGAR
TRINCOMALEE.
Tel. Gen. : 026 2050622
CIA : 026 2220379
CIA (Mob) : 077 9223996
Fax : 026 2226197
E-mail : audit@ep.gov.lk
Web : www.ep.gov.lk

**Sub Office :**
BOC ROAD, KALMUNAI.
Tel. Gen. : 067 2059880
CIA : 067 2226280
CIA (Mob) : 077 9223996
IA (Mob) : 077 6106455
Fax : 067 2222893
E-mail : audit@ep.gov.lk
Web : www.ep.gov.lk

02. **Name of Work :-** Expansion of Ameer Ali Library at Tamil Division -04,Sammanthurai.

**Contract No :-**STR/PS/PLD/N/03/PT/03/2022

**Name of Contractor :-**Mafaza Community Center

**Contract Amount :-** 1,999,913.00

**Physical Progress :-** 28%

மேற்குறிப்பிட்ட ஒப்பந்த வேலையானது சம்மாந்துறை தமிழ் பிரிவு 04 இல் உள்ள போதிலும் அப்பிரிவிலுள்ள Community Center ஒன்றிற்கு வழங்காமல் Block J East-02 இல் உள்ள Community Center ஒன்றிற்கு வழங்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

03. **Name of Work :-** Establishment full-fledge maintenance and repair work shops with equipment

**Contract No :-**STR/PS/PLD/N/03/PT/04/2022

**Name of Contractor :-**Al-Bushra Community Center -.

**Contract Amount :-** 1,999,460.20

குறித்த ஒப்பந்த வேலையானது சம்மாந்துறை தமிழ் பிரிவு 02 இல் உள்ள போதிலும் அப்பிரிவிலுள்ள Community Center ஒன்றிற்கு வழங்காமல் தமிழ் பிரிவு 03 இல் உள்ள Community Center ஒன்றிற்கு வழங்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

நிதி அமைச்சின் 01/2021 இலக்க சுற்று நிருபத்தின் 2.5 உப பிரிவின் படி ஒதுக்கப்படும் ஒப்பந்தம் சமூக அடிப்படை நிறுவனத்தின் அதிகார எல்லைக்குள் இருத்தல் வேண்டு எனக்குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இதனை மீறும் வகையில் செயற்பட்டுள்ளமையை காணமுடிந்துள்ளது.

மேலும் சமூக அடிப்படையான நிறுவனங்களுக்கு நேரடி ஒப்பந்தங்களை வழங்கும் போது அரச சுற்றுநிருப இல 01/2021 இன் படி உறுதிப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் பின்வருமாறு.

- குறித்த சமூக அமைப்புக்களின் நிதி நிலமையினை உறுதிப்படுத்தக கூடியவாறான வங்கிக்கணக்கு மற்றும் கடன் வசதிகள் இருப்பதை உறுதிப்படுத்தும் ஆவணம்.
- இதே போன்ற வேலைகள் செய்தமை தொடர்பான முன்னைய அனுபத்தினை உறுதிப்படுத்தத்தக்க சான்றுகள் அல்லது செய்த வேலைகள் மற்றும் அவற்றின் தரநிலைகள் தொடர்பான திருப்திகரமான சான்றுகள்.

❖ ஒரு வருடத்திற்கு முன்பு வழங்கப்பட்ட ஆனால் முழுமையடையாத ஒப்பந்த வேலைகள் உள்ளடங்கலாக கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த பணிகள் குறித்து சம்மந்தப்பட்ட சமூக அடிப்படை நிறுவனங்களால் வெளியிடப்பட்ட அறிக்கைகள்.

❖ குறித்த வேலையானது துணை ஒப்பந்தம் செய்யப்படமாட்டாது என்பதை உறுதிப்படுத்தி உரிய சமூக நிறுவனத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை.

மேற்படி விடயங்களை உறுதிப்படுத்தாமல் பெறுகை குழுவானது சமூக அடிப்படை நிறுவனம் ஒன்றிற்று ஒப்பந்தம் வேலை ஒன்றை வழங்கியமையானது குறித்த சுற்று நிருபத்தை மீறும் செயலாகும்.

## அவதானிப்பு – 02 நிர்வாகம் தொடர்பானவை.

01. வேலைத் தொழிலாளிகள் மற்றும் சுகாதாரத் தொழிலாளிகள் அலுவலகக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை:

I. பதிலீட்டு அடிப்படையில் வேலைத் தொழிலாளி நியமனம் பெற்றவர்களிலும், சுகாதாரத் தொழிலாளி நியமனம் பெற்றவர்களிலும் சிலர், அலுவலகக் கடமைகளில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களினதும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும் கடமைகளை செய்து கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இதனால் சுகாதாரத் தொழிலாளிகளினால் நிறைவு செய்யப்பட வேண்டிய வேலைகள் மற்றும் வேலைத் தொழிலாளிகளினால் நிறைவு செய்யப்பட வேண்டிய வேலைகள் தடைப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இவ்வாறு கடமையாற்றுபவர்களின் பெயர்ப் பட்டியலொன்றை தயாரித்து அனுப்பிவைப்பதுடன், ஆட்சேர்ப்புத் திட்டம் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் அவரவர்களுக்குரிய கடமைப் பொறுப்புக்களை வழங்கி அறிக்கை செய்யவும்.

II. பதிலீட்டு அடிப்படையில் வேலைத் தொழிலாளிமற்றும் சுகாதாரத் தொழிலாளி நியமனம் பெற்றவர்களில் சிலர் காலை 8.45 இற்கு வந்திருந்ததனையும், சிலர் 4.30 அலுவலகத்தை விட்டு சென்றிருந்ததனையும் அவதானிக்க முடிந்தது. இவர்களது கடமை நேரம் என்ன என்பதை குறிப்பிட்டு, உரியநேரத்திற்கு பொருந்தாது கடமையாற்றியமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிக்கையிடவும்.

III. அங்கீகரிக்கப்பட்ட ஆளணி வரிசையில், மொத்தமாக இருக்க வேண்டிய சுகாதாரத் தொழிலாளிகள் மற்றும் வேலைத் தொழிலாளிகள் எத்தனை பேர் என்பதைக் குறிப்பிட்டு தற்போது எத்தனைபேர் உள்ளனர் என்பதை குறிப்பிட்டு அறிக்கை செய்யவும். தங்களது அங்கீகரிக்கப்பட்ட ஆளணி விபரத்தினை உறுதிப்படுத்தி அனுப்பிவைக்கவும்.

02. வெளிச் செல்கைப் பதிவேடு (Movement Register), முன்வேலைத் திட்டம் (Advance Programme), வருகைப் பதிவுப் புத்தகம்.

I. வெளிச் செல்கைப் பதிவுப் புத்தகத்தில் ஒப்பமிட்டுச் சென்றவர்களில் அநேகமானவர்கள் அனுமதி பெறாமல் ஒப்பமிட்டுச் சென்றுள்ளனர்.

II. (A). Mr. A.R.M.Munawwar – TO என்பவர், 2022 இல்,Janu மாதம் முதல் July வரை Advance Programme சமர்ப்பித்துள்ளார். அதன் பின் சமர்ப்பிக்கவில்லை. சமர்ப்பிக்காமை தொடர்பில் சமர்ப்பிக்காதவரிடமும், பெற்றுக் கொள்ளவேண்டிய பொறுப்பில் இருப்பவர் பெற்றுக் கொள்ளாமைக்கும் விளக்கம் கோரி அறிக்கை செய்யவும்.

(B). Advance Program சமர்ப்பித்தவர்கள் Deviation Programmer சமர்ப்பித்திருத்தல் வேண்டும். ஆனால் Mr. A.R.M.Munawwar – TO.Deviation Programmer சமர்ப்பிக்கவில்லை. Deviation Program சமர்ப்பிக்காமை தொடர்பில், காரணத்தை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடம் விளக்கம் கோருவதுடன், பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமைக்கு, விடயத்திற்குப் பொறுப்பானவரிடமும் விளக்கங்கோரி அறிக்கை செய்யவும்.

(c) Mr. A.R.M.Munawwar – TO என்பவரின் Advance Programme இல் ஒவ்வொரு நாளிலும், Insp. of Civil, Electrical Works, Street Lines, Water Supply and Building Application எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. வெளியில் சென்ற முழு நாட்களுக்கும் இவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே Advance Prog இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் எங்கே நடந்தன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். எத்தனை Street Line Certificate கிடைத்தன எத்தனை Visit ஒப்பட்டுப்பார்த்து அறிக்கை செய்யவும். CTA Climes படிவம் இதனுடன் ஒப்பிட்டுப் பார்த்து அறிக்கை செய்யவும். ஒத்துவராத சந்தர்ப்பங்களில் Visit தனிப்பட்ட விடுமுறையாக்கப்படுவதுடன், CTA clime ஆக கொடுத்த பணத்தில் மேலதிக கொடுப்பனவு கணிப்பிடப்பட்டு அறவிடப்பட வேண்டிவரலாம் என்பதைக் கவனத்தில் எடுத்து அறிக்கை செய்யவும்.

III. Mr. M.M.M.Mustaffa – TO அலுவலகத்திற்கு வருகை ஒப்பமிட்டுள்ளார். ஆனால் வெளிக்கள கடமைகளுக்கு செல்லும் போது வெளியில் செல்வதற்கான புத்தகத்தில் (Movement Register) ஒப்பமிட்டிருக்கவில்லை. அத்துடன் Advance Programmer, Deviation Programmer என்பனவும் சமர்ப்பிக்கவில்லை. இதனால் இவரினால் நிறைவு செய்யப்பட்ட கடமை விபரங்கள் அலுவலகத்தில் இருக்கவில்லை.

அவதானிப்பு – **03** நிதி விடயங்கள்.

**I.**தொழிநுட்ப மதிப்பீட்டுக்குழு அறிக்கை பெறப்படாத கொள்வனவுகள்.

கீழ்வரும் கொள்வனவுகளுக்கு தொழிநுட்ப மதிப்பீட்டுக்குழு அறிக்கை பெறப்படாமல் கொள்வனவுகள் இடம்பெற்றுள்ளமையை கணக்காய்வின் போது அவதானிக்க முடிந்தது.

01. CCT V Camera கொள்வனவு -

| Date | Voucher No | Cheque No | Amount |
|---|---|---|---|
| 05.12.2022 | 1057 | 482515 | 500,280.00 |

02. CCT V Camera கொள்வனவு -

| Date | Voucher No | Cheque No | Amount |
|---|---|---|---|
| 05.12.2022 | 1060 | 482518 | 607,200.00 |

03. LED Panel Light கொள்வனவு -

| Date | Voucher No | Cheque No | Amount |
|---|---|---|---|
| 30.12.2022 | 1213 | 482724 | 291,750.00 |

**II.**மாற்றப்படாத காசோலை தொடர்பானவை.

கொடுப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்டும் இதுவரை மாற்றப்படாமல் காசோலை ஒன்று உள்ளமையை கணக்காய்வின் போது அவதானிக்க முடிந்தது. எனவே நிதி ஒழுங்கு விதி 396 க்கு அமைவாக நடவடிக்கையினை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையை சமர்பிக்க.

| Date of Paid | Voucher No | Cheque No | To Whom Paid | Amount |
|---|---|---|---|---|
| 17.05.2022 | 423 | 481569 | U.L.Abdul Majeed | 7,500.00 |

**III.**காசுப் புத்தகம் தொடர்பானவை.

காசோலை எழுதுபவரினால் பயன்படுத்தப்படும் காசுப் புத்தகத்தில், காசோலையை எழுதும் போதான மீதி எவ்வளவு என்பதை கண்டறிவதற்கான நடைமுறை எதுவும் இருக்கவில்லை. இதனால் ஒரு காசோலையை எழுதுவதற்கு தேவையான தொகைகாசுப் புத்தகத்தின் பிரகாரம் உள்ளதா என்பதை அறிந்து கொள்ளாமல் காசோலைகள் எழுதப்படுகின்றன.

அவதானிப்பு – 04 வருமான அறவீடுகள், நிலுவை அறவீடுகள் தொடர்பான குறைபாடு:-

I. கடையறை வாடகை நிலுவை தொடர்பானவை.

31.12.2022 ஆம் திகதி வரை கடையறை வாடகை நிலுவையாக ரூபா 811,512.06 உள்ளமையை கணக்காய்வின் போது அவதானிக்க முடிந்தது.

II. ஆதனவரி நிலுவை தொடர்பானவை.

31.12.2022 ஆம் திகதி வரை ஆதனவரி நிலுவையாக ரூபா 23,432,712.19 உள்ளமையை அவதானிக்க முடிந்தது.

நி.ஒ – 175(2) இன்படி நிலுவைகளுக்கு விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். சேகரிக்கும் உத்தியோகத்தர் நிலுவைகள் விடயத்தை கவனமாய் மீளப்பார்வையிடல் வேண்டும். தேவைப்படின் விரைந்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அவர் பொறுப்பாயிருப்பார். சட்ட மூலமாகவேனும் நிலுவைகள் சேகரிக்கப்பட முடியாவிடின் அவ்வருமதிகளைக் கைவிடுவதற்கு வேண்டிய வழிகளை விரைவில் எடுத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி மேற்குறித்த நிலுவைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளமைக்கான காரணத்தினை சமர்பிக்க.

III. வருமானங்கள் தொடர்பானவை.

வருமானங்கள் தொடர்பான கோவைகள் வருமானப் பரிசோதகரிடம் (RI) இருப்பதை காணமுடிகின்றது. இதற்கு உரிய விடய உத்தியோகத்தர்கள் இடப்படவில்லை. இதனால் வருமானத்தை திரட்டுவதில் ஒரு பிற்போக்கான நிலமை காணப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்ய வருமான ஏடானது இரண்டு பொறுப்புள்ள உத்தியோகத்தர்களிடம் கொடுக்கப்பட்டு அவர்களால் பொறுப்புள்ள வகையில் நாளாந்தம் ஏடுகளில் பதிந்து மேற்பார்வை உத்தியோகத்தர் அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

IV. இறைச்சிக் கடை மற்றும் பொதுச் சந்தை குத்தகைக்கு வழங்கப்பட்டமை தொடர்பில் நிலுவைகள் அறவீடுகள் என்பனவற்றின் சரியான தொகை இதுவரை கணிப்பிடப்படவில்லை. 2022.10.12ம் திகதியிட்டு Covid -19 பாதிப்புக் காரணமாக குறித்த அளவிலான தொகையொன்றினை கழிவு செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது. ஆயினும் இத்தொகை இதுவரை கணிப்பீடு செய்யப்பட்டு கழிக்கப்படாததுடன் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இவ்வாறு அறவீடுசெய்யப்பட வேண்டியவர்கள் பெயர் மற்றும்

தொகைகளுடனான பட்டியல் ஒன்றினை சமர்ப்பிப்பதுடன், பொருத்தமான நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை செய்யவும்.

V.அறவீடுகளுடன் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்கள், கோவைகள் மற்றும் பதிவேடுகள் வருமான மேற்பார்வையாளரிடமும் (RI) மும் வருமான சேகரிப்பில் ஈடுபடுவதற்கு ஒத்தாசைபுரியும் பதில் கடமை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதற்காலிக வேலைத் தொழிலாளி மற்றும் சுகாதாரத் தொழிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவை ஒரு நிரந்தர உத்தியோகத்தரிடம் பொறுப்பாக்கி அறிக்கை செய்யவும்.

VI.வியாபார உத்தரவுக் கட்டணப் பதிவுகள் தற்போது பேணப்படும் முறையில் கடந்த காலங்களில் இருந்த அனைத்து வியாபார நிலையங்களிலும் இவ்வருடத்திற்கான கட்டண அறவீடு செய்யப்பட்டுள்ளதா என்பதை அறியமுடியதுள்ளது. இதனால் அனைத்து வியாபார நிலையங்களிலும் 2022ம் வருடத்திற்கான உத்தரவுப் பத்திர கட்டணம் அறவீடு செய்யப்பட்டதை உறுதிசெய்ய முடியவில்லை. எனவே 2020 இல் எத்தனை வியாபார நிறுவனங்கள் இருந்தன, 2021 இல் எத்தனை நிலையங்கள் புதிதாக திறக்கப்பட்டன எத்தனை நிலையங்கள் மூடப்பட்டன, எத்தனை நிலையங்களில் இருந்து அறவீடுகள் செய்யப்பட்டன என்று அறிக்கையிடவும். இதே போன்று 2022 இற்கும் அறிக்கை செய்யவும்.

அவதானிப்பு – 05 பொதுவானவை:

I. வாகனங்களின் சம்பவப் புத்தகம் (Vehicle Log Book) இல் வாகன விபரங்கள் பதியப்படவில்லை.

II. குறும் விடுமுறைப் பதிவுப் புத்தகம் (Short Leave Register) இன் அமைப்பில், வெளியில் செல்லும் உத்தியோகத்தர் செல்லும் போது ஒப்பமிட்டு அனுமதி பெற்றுக் கொள்வதற்கும், திரும்பி வந்தபின் மீண்டும் திரும்பியதனையும், திரும்பிய நேரத்தையும் உறுதிசெய்வதற்காக மேற்பார்வை அதிகாரியின் ஒப்பம் பெற்றுக் கொள்வதற்குமான முறைக்கு மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

III. (அ). வாகனங்கள் நிறுத்து மிடத்தில் துப்பரவுத் தொழிலாளிகள் ஒப்பமிடுகின்றனர். S.K.Rajinikanth வரவு ஒப்புபுத்தகத்தில் செல்கை ஒப்பமிட்டுள்ள போதிலும், நேரம் இட்டிருக்கவில்லை. A.Ramachandren என்பவர் நீலப் பேனாவினால் ஒப்பமிட்டு, கறுப்புப் பேனாவினால் நேரமிட்டுள்ளார். எனவே A.Ramachandren என்பவர் உண்மையில் செல்கை ஒப்பமிட்டுசென்ற போது நேரமிடாமல், வேறொருநேரத்திலேதான் அவருடைய நேரமிடப்பட்டுள்ளது. P.M.Salihu என்பவர் வருகை ஒப்பமிட்டுள்ளார். செல்கை ஒப்பமிடவில்லை. ஆனால் தற்போது அலுவலகத்தில் இருக்கவில்லை. வீட்டில்

இருப்பதாகதகவல் வந்துள்ளது. எனவே இவர்களின் வருகைப் பதிவுப் புத்தகம் முறையான மேற்பார்வைக்குட்படவில்லை. அத்துடன் இவர்களின் வருகை செல்கைவிரலடையாள இயந்திப் பதிவுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுவதாகத் தெரியவில்லை.

(ஆ). வருகை ஒப்பமிட்டபலரது ஒப்பங்கள் பல நாட்களில் பேனாவினால் கீறிட்டு வெட்டிவிடப்பட்டுள்ளது. ஒப்பங்களை கீறிவெட்டிவிட முடியாது.

- எனவேயாராருடைய ஒப்பங்கள் எந்தெந்த திகதியில் வெட்டிவிடப்பட்டுள்ளன எனக்குறிப்பிட்டு பட்டியல் ஒன்றினை அனுப்பிவைக்கவும்.
- இவ்வாறு ஒப்பங்கள் வெட்டுப்பட்டவர்களுக்கு அந்த நாட்கள் விடுமுறையாக கணிக்கப்பட்டதா அல்லது வேறு ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதா என்பதை அறிக்கையிடவும்.
- இவ்வாறு யாராருடைய ஒப்பங்கள் வெட்டிவிடப்பட்டுள்ளதோ அவர்களிடம் விளக்கங்கோரிப் பெற்று அறிக்கை செய்யவும்.
- இந்த ஒப்பங்களை வெட்டிவிட்டமை தொடர்பில் யார் இவற்றை வெட்டினாரோ அவரிடம் விளக்கம் பெற்று அறிக்கை செய்யவும்.

(இ). Mr.P.M.Salihu என்பவவர் வரவுப் புத்தகத்தில் ஒப்பமிடுவதற்கு வரவுப் புத்தகத்தில் 2023.01.08ம் திகதியிட்டு தனது முதலாவது ஒப்பத்தை இட்டுள்ளார். இந்த திகதியிடும் போது இதற்கு முந்திய நாளில் செல்கை ஒப்பமிடுவதற்கென 03 இடைவெளிகள் இடப்பட்டிருந்தன. எனவே இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் எனக் கருதப்படுகின்றது. இது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை செய்யவும்.

(ஈ) வரவுப் புத்தகத்தில் வருகை செல்கை ஒப்பமிடுவது மற்றும் அவற்றைக் கொண்டு விடுமுறைகள், குறும் விடுமுறைகள் கணிப்பிடுவது போன்றனவற்றில் அசிரத்தையுடனும் பொறுப்பற்றவிதத்திலும் நடந்துகொள்வதாகக் கருதப்படுகின்றது.

IV. சாரதிகள் வரவுப் புத்தகம், 2023.01.10ம் திகதி, 10 பேர் வருகை ஒப்பமிட்டுள்ளதுடன், 09 பேர் செல்கை ஒப்பமிட்டுள்ளனர். ஒருவருக்கு செல்கை ஒப்பமிடுவதற்காக ஒரு இடைவெளிவைக்கப்பட்டு பின்னர் கீறிவெட்டிவிடப்பட்டுள்ளது. இவ்வாறு இடைவெளிவைத்து ஒப்பமிட்டவர் A.H.Hithayathulla என்பவராவார். எனவே

அன்றைய தினம் ஒப்பமிடாதவர் யார் எனக் கண்டறிந்து அவரிடம் விளக்கம் பெற்றுக் கொள்வதுடன் பொருத்தமான நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை செய்யவும். அத்துடன் இடைவெளிவைத்த A.H.Hithayathulla என்பவரிடம் விளக்கம் பெற்று பொருத்தமான நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை செய்யவும்.

V. (அ). ஒப்பங்களுக்கு அருகில் ஒப்பமிடும் உத்தியோகத்தர்களின் வரவுப் புத்தக தொடர் இலக்கம் குறிக்கப்படவில்லை. இதனால் ஒப்பமிட்டவர் யார் என்பதையும் ஒப்பமிடாதவர்கள் யார் என்பதையும் விரைவாக கண்டறிய முடியவில்லை.

(ஆ). 2013.01.14ம் திகதி இடைவெளிகள் வைத்து வெட்டிவிடப்பட்டிருந்தது. பின்னேர் வெட்டிவிட்ட இடங்களுக்கு மேலால் 03 பேர் ஒப்பமிட்டுள்ளனர். இது தொடர்பில் வெட்டிவிட்டவர், ஒப்பமிட்டவர்கள் அனைவரிடமும் விளக்கம் பெற்று அறிக்கை செய்யவும்.

வரவு ஒழுங்கு விடயங்களுக்கு விளக்கமளிக்கையில் வரவுப் பதிவு இயந்திரம் பதிவுகளை பரிசீலனை செய்து விளக்கமளிப்பதுடன், சம்பந்தப்பட்ட பக்கங்களின் பிரதிகளை உறுதிப்படுத்தி அறிகை செய்யவும்.

***H.M.Mohamed Rasheed* - SLAcS-I**
Chief Internal Auditor

H.M. Mohamed Rasheed (SLAcS-I)
Chief Internal Auditor
Department of Provincial Audit-E.P
Traincomalee

Copies:-

1. The Commissioner, Department of Local Government, EP - Trincomalee - FIP
2. Assistant Auditor General, National Audit Office ,EP -Amparai - FIP
3. Director General, Department of Management Audit,-Treasury Colombo -01 - FIP
4. The Assistant Commissioner, ACLG Office, Amparai - FIP